# பிளாஸ்டிக் விழிப்புணர்வு குறித்த நவீன தண்டி யாத்திரை

கும்மிடிப்பூண்டி, மார்ச் 13-

பிளாஸ்டிக் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வை, மக்கள் மத்தியில் ஏற்படுத்த நவீன தண்டி யாத்திரை மேற்கொள்ளப்பட்டது.

கும்மிடிப்பூண்டி அடுத்த, புதுகும்மிடிப்பூண்டி பகுதியில், 'காந்தி வேர்ல்ட் பவுண்டேஷன்' என்ற அமைப்பு இயங்கி வருகிறது. பிளாஸ்டிக் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து தெளிவாக, மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்கில், அந்த அமைப்பினர் சார்பில் நவீன தண்டி யாத்திரை நடத்தப்பட்டது.

கடந்த 1930ல் காந்தி வழிநடத்தி சென்ற தண்டி யாத்திரையின் துவக்கத்தில், 78 பேர் பங்கேற்றனர். அதேபோன்று நவீன தண்டி யாத்திரையில், காந்தி போல் வேடமணிந்த மாணவனை பின்பற்றி, கும்மிடிப்பூண்டி ஆதர்ஷ் வித்யாலயா பள்ளியைச் சேர்ந்த, 78 மாணவ, மாணவியர் உடன் சென்றனர்.

அமைப்பின் நிறுவனர் ராஜேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பிளாஸ்டிக் விழிப்புணர்வு குறித்த உறுதிமொழி ஏற்ற பின்னர், கும்மிடிப்பூண்டி பை-பாஸ் சாலையில் இருந்து துவங்கிய நவீன தண்டியாத்திரை, கும்மிடிப்பூண்டி பஜார் வழியாக சென்று ரெட்டம்பேடு சாலை சந்திப்பில் முடிக்கப்பட்டது.

பிளாஸ்டிக் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்த அறிவிப்பு தட்டிகளை, மாணவர்கள் எடுத்து சென்றதுடன் பிளாஸ்டிக்கின் வகைகள், அவற்றினால் ஏற்படும் தீமைகள் குறித்த தெளிவான விளக்கம் கொண்ட பிரசுரங்களை மக்களிடம் வழங்கினர்.




*பிளாஸ்டிக்கால் ஏற்படும் தீமைகள் குறித்த விழிப்புணர்வு தட்டிகளை ஏந்தியபடி, நவீன தண்டி யாத்திரையில் பங்கேற்ற மாணவ, மாணவியர்.*